(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 14(6).]

# பாராளுமன்றம்

## 14 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2015 யூன் 22 திங்கட்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2015 யூலை 07, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

4812/ '14

கௌரவ புத்திக பதிரண – வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊடகவியலாளர்களுக்கு இலவசமாக மடிக்கணினிகள் வழங்கப்பட்ட போது வெளிப்படைத் தன்மையுடன் செயற்படவில்லையெனவும்;

(ii) ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுகின்ற மற்றும் ஓய்வுபெற்றுள்ள ஊடகவியலாளர்களுக்கும் மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளனவெனவும்

ஊடகவியலாளர்கள் குற்றம் சாட்டுகின்றனரென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ள ஒவ்வொரு ஊடகவியலாளரினதும் சேவைக் காலம் தனித்தனியே யாதென்பதையும்;

(ii) ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுகின்ற மற்றும் ஓய்வுபெற்ற ஊடகவியலாளர்களுக்கும் மேற்படி மடிக்கணினிகள் வழங்கப்பட்டிருப்பின், அத்தகைய ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) இவர்களது பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iv) இவ்வாறு கணினிகளை வழங்குவதற்கு செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ள நிரந்தர ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இவர்களுக்கு மடிக்கணினிகளை வழங்குவதற்காக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5131/ '14

கௌரவ அசோக் அபேசிங்க,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2014 தயட்ட கிருள கண்காட்சிக்கு சமாந்தரமாக அமுலாக்கப்பட்ட சிறிய குளங்களைப் புனரமைப்பதற்கான கருத்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட குளங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் குருநாகல் தேர்தல் தொகுதியைச் சேர்ந்த, வெல்லவ, தல்விட்ட குளத்தின் புனரமைப்புப் பணிகளை ஆரம்பித்தல் தொடர்பான பெயர்ப்பலகை அந்த குளத்தின் அருகில் தாபிக்கப்பட்டுள்ள போதிலும், இதுவரை அதன் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்டாமைக்கான காரணங்கள் யாவை;

(iii) இதற்கான நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளனவா;

(iv) மேற்படி குளத்தின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5940/ '15

கௌரவ அனுர திஸாநாயக்க,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2000 முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் இலங்கை கடற்படையின் நிறைவேற்றுக் கிளைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக கவனத்திற்கொள்ளப்பட்ட கல்வித் தகைமைகள் வருடாந்த ரீதியில் தனித்தனியே யாவை என்பதையும்;

(ii) 2006 ஆம் ஆண்டு இலங்கை கடற்படையின் நிறைவேற்றுக் கிளைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி ஆண்டில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட குழுவிற்கு உரித்தான திரு. யோசித ராஜபக்ஷவின் க.பொ.த. (சா/த) மற்றும் க.பொ.த. (உ/த) தகைமைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) திரு. யோசித ராஜபக்ஷ இலங்கை கடற்படையில் இணைந்த திகதி யாதென்பதையும்;

(ii) இவர் பிரித்தானிய றோயல் கடற்படை அகடமியில் பயிற்சிக்காக இணைந்துகொண்ட திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி பாடநெறிக்கு திரு. யோசித ராஜபக்ஷவை தெரிவுசெய்துகொள்ள ஏற்புடையதாக்கிக் கொண்ட அளவுகோல்கள் யாவை என்பதையும்;

(iv) இவர் மேற்படி பயிற்சியை பூர்த்தி செய்த திகதி யாதென்பதையும்;

(v) மேற்படி பயிற்சியின் இறுதியில் நடாத்தப்பட்ட பரீட்சைகளில் இவர் பெற்ற பெறுபேறுகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5946/ '15

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— மக்கள் ஒழுங்கு மற்றும் கிறித்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்கள் ஒழுங்கு மற்றும் கிறித்தவ சமய அலுவல்கள் அமைச்சரினதும் பிரதி அமைச்சரினதும் பதவியணிக்கான நியமனங்கள் சனாதிபதி செயலாளரின் CA/1/171/1 ஆம் இலக்க 2010 மே 14 ஆந் தேதிய அரச செலவின முகாமைத்துவ சுற்றிக்கைக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(ii) மேலே குறிப்பிட்டுள்ள பதவியணிக்கு நியமிக்கப்பட்டுள்ளவர்களின் பெயர்கள், பதவிகள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள், தகைமைகள் ஆகிய விபரங்களைச் சமர்ப்பிப்பாரா;

(iii) மேற்சொல்லப்பட்ட பதவியணியில் உத்தியோகபூர்வ வாகனங்கள் உரித்தான உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்கள், வாகன வகைகள், இலக்கங்கள் மற்றும் உற்பத்திசெய்த ஆண்டுகள் யாவை;

(iv) மேற்படி அமைச்சருக்கும் பிரதி அமைச்சருக்கும் வழங்கப்பட்டுள்ள வாகனங்கள் யாவை;

(v) மேற்படி வாகனங்களுக்கு மேலதிகமாக அமைச்சின் ஒதுக்கத்திலிருந்து அல்லது விடயப்பரப்புடன் இணைந்த திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்டமுறையான நிறுவனங்களிலிருந்து மற்றும் பல்வேறு கருத்திட்டங்களிலிருந்து அமைச்சருக்கு அல்லது பிரதி அமைச்சருக்கு அல்லது மேற்படி பதவியணிக்கு பெறப்பட்டுள்ள வாகனங்கள் யாவை;

(vi) அந்த வாகனங்களின் இலக்கங்கள், வகைகள் மற்றும் உற்பத்திசெய்த ஆண்டுகள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6017/ '15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2014.12.24 ஆம் திகதி கம்புறுப்பிட்டி, நாரந்தெனிய தேசிய பாடசாலை விளையாட்டு மைதானத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்று நடாத்தப்பட்டதா என்பதையும்;

(ii) அதற்குப் பாடசாலை அதிபரின் அல்லது தேசிய பாடசாலைகள் பணிப்பாளரின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேலே குறிப்பிடப்பட்ட திகதியில் நடாத்தப்பட்ட சனாதிபதி வேட்பாளரின் பிரச்சாரக் கூட்டத்துக்கென 2014.12.16 ஆம் திகதி மேற்படி பாடசாலையின் மதில் இடித்து அகற்றப்பட்டதா என்பதையும்;

(iv) பாடசாலைக் குழுவின் கோரிக்கையின் அடிப்படையில் பாடசாலை அதிபரினால் மேற்படி மதிலை இடித்து அகற்ற வேண்டாமென பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட மதில் இடித்து அகற்றப்பட்டதன் காரணமாக விளையாட்டு மைதானத்துக்கும், பாடசாலை மாணவர்களின் பாதுகாப்புக்கும் பாதகமான நிலை ஏற்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அரசியல் தேவையின் அடிப்படையில் இடித்து அகற்றப்பட்ட மதிலுக்கு ஏற்கப்பட்ட செலவினம் எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி மதில் பாடசாலை மாணவர்களின் பெற்றோர்களின் உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்டதா என்பதையும்;

(iv) இடித்து அகற்றப்பட்ட மதிலை உரிய நிலைமைக்குக் கொண்டுவருவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

6023/ '15

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) உலகில் பல்வேறு நாடுகளிலுமுள்ள இலங்கையர்களுக்குச் சொந்தமான வங்கிக் கணக்குகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி கணக்குகளின் நிலுவைகள் ஒவ்வொரு நாட்டுக்கும் அமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) குறிப்பிட்ட கணக்கு உரிமையாளர்கள் இலங்கையின் சட்டங்களை மீறுகின்ற வகையில் மேற்படி கணக்குகளில் பணத்தை வைப்பிலிட்டுள்ளார்களா என்பதையும்;

(iv) ஆமெனில், அவ்வாறான கணக்குகள் பற்றிய தகவல்கள் யாவை என்பதையும்;

(v) மேலே குறிப்பிடப்பட்ட சகல கணக்குகளினதும் தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு இராஜதந்திர ரீதியாக குறித்த வங்கிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(vii) மேற்படி கணக்குகள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(viii) ஆமெனில், அது எவ்வாறென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) என்னால் இதற்கு முன்னர் ஒரு சந்தர்ப்பத்தில் சுவிற்சலாந்தின் HSBC வங்கியில் உள்ள கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்ட வினாவுக்கு வழங்கப்பட்ட உங்களது விடையில் நிதியியல் புலனாய்வுப் பிரிவிற்கேற்புடைய சட்டங்கள் தேவைக்கேற்றவாறு திருத்தப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்ததா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கமைய குறித்த சட்டங்கள் இன்றளவில் திருத்தப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6033/'15

கௌரவ விஜித ஹேரத்,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தினால் செயலாளர் பதவியில் ஒருவரை மாத்திரமே அமர்த்த முடியும் என்பதையும்;

(ii) மேற்படி செயலாளர் பதவியில் 12 ஆண்டுகள் பணியாற்றிய திருமதி கே.கே.ஜி. பத்மா 2010.08.12ஆம் திகதி முதல் குறித்த பதவியிலிருந்து மாற்றப்பட்டுள்ளார் என்பதையும்;

(iii) முன்னாள் பணிப்பாளர் நாயகமான திரு. அநூஷ பல்பிட்டவினால், அங்கீகரிக்கப்பட்ட வரையறையினைத் தாண்டி மேற்கொள்ளப்பட்ட வாகனங்களின் பிரயாண குறிப்புக்களில் கையொப்பமிடுவதை இவர் ஆட்சேபித்தமையே மேற்படி மாற்றலுக்கான காரணம் என்பதையும்;

(iv) இவருக்கு மேற்படி பதவியில் எவ்விதமான கடமையும் ஒப்படைக்காது வேறொருவரை பதில் கடமையாற்றும் செயலாளராக நியமித்து மாதாந்த கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) குறித்த பதவிக்கென நியமிக்கப்பட்ட ஒருவர் காணப்படுகையில், கொடுப்பனவு வழங்கி வேறொருவரை சேவையில் ஈடுபடுத்துவது முற்றாக சட்டத்துக்கு முரணான ஒரு செயலாக அமையாதா என்பதையும்;

(ii) திருமதி கே.கே.ஜீ. பத்மாவை மீண்டும் குறித்த பதவியில் சேவையில் அமர்த்தி, இவர் இழந்த பதவி உயர்வுகளை பெற்றுக்கொடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6037/ '15

கௌரவ ராஜீவ விஜேசிங்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்துடன் தொடர்புடைய குழுவொன்றுக்கு ஒப்பந்தமொன்றை வழங்கியமை தொடர்பாக ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான முன்னாள் நிரந்தரப் பிரதிநிதி திருமதி ஷேனுகா செனெவிரத்ன அவர்களுக்கு எதிராகவும்;

(ii) ஐக்கிய ராஜ்ஜியத்துக்கான முன்னாள் உயர் ஸ்தானிகர் டாக்டர் கிறிஸ் நோனிஸ் அவர்கள் தாக்குதலுக்கு உட்பட்ட பின்னர் திருமதி செனெவிரத்னவினால் டாக்டர் நோனிசுக்கு எதிராகவும்;

சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுதல்கள் தொடர்பாக அவர் அறிவாரா?

(ஆ) (i) (அ)(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுதல் ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான முன்னாள் நிரந்தரப் பிரதிநிதிகளுள் ஒருவரான திருமதி தமரா குணநாயகத்தினால் திருமதி ஷேனுகா செனெவிரத்னவுடனான தனிப்பட்ட பிரச்சினையின் காரணமாக சுமத்தப்பட்டதென அண்மையில் வழங்கிய செவ்வியொன்றின் போது அவர் தெரிவித்தாரா என்பதையும்;

(ii) அவ்வாறு குறிப்பிடுவதற்கு அவரிடம் சாட்சிகள் இருக்கின்றதா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) இந்தக் குற்றச்சாட்டுதல் தொடர்பில் முறைசார் விசாரணைகள் இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) இக்குற்றச்சாட்டுதல்கள் தொடர்பான விசாரணை அறிக்கைகளை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) பகுதி (அ) (i) இல் குறிப்பிடப்பட்ட ஒப்பந்தம் தொடர்பாக திறைசேரி பிரதிநிதிகளினால் தயாரிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையை அவர் பரிசீலித்தாரா

என்பதையும் அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

6038/ ’15

கௌரவ விக்டர் அந்தனீ,— உள்ளகப் போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சிலாபம் மற்றும் புத்தளம் இ.போ.ச. டிப்போக்களில் பணிபுரிந்த டிப்போ முகாமையாளர்கள் மற்றும் உதவி முகாமையாளர்கள் எவ்வித குற்றச்சாட்டுமின்றி இப்பதவிகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளனரென்பதையும்;

(ii) இப்பதவிகளுக்கு குறைந்தபட்சம் க.பொ.த.(சா.த) பரீட்சைக்குத் தோற்றாத வேறு எவ்வித தகைமைகளுமற்றவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனரா என்பதையும்;

(iii) இவ்வாறு தகைமையற்றவர்கள் நியமிக்கப்பட்டுள்ளமையினால் குறித்த நிறுவனங்கள் வீழ்ச்சியடைகின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேலே (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட பதவிகளிலிருந்து நீக்கப்பட்டவர்களை மீண்டும் நியமித்து நல்லாட்சிக்கு முன்மாதிரியொன்றை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

6062/ ’15

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2014 ஆம் ஆண்டில் நிரல் அமைச்சின் அனுசரணையுடன் வட மாகாண கல்வி, கலாசார, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் அலுவல்கள், நிரல் அமைச்சினால் நடத்தப்பட்ட கல்விக் கருத்தரங்கு தொடர்பாகவும் மற்றும்

(ii) அந்த கருத்தரங்கின் நோக்கம், கருத்தரங்கிற்கு ஒதுக்கப்பட்ட பணம் மற்றும் கருத்தரங்கில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாகவும்;

அவர்அறிவாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி அ (ii) இல் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6074/ '15

கௌரவ ரீ.பீ. ஏக்கநாயக்க,— நெடுஞ்சாலைகள், முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 'தயட்ட கிருள' நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணைவாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டுவந்த கருத்திட்டங்கள் தற்போது நிறுத்தப்பட்டுள்ளமையை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) குறிப்பிட்ட கருத்திட்டங்கள் நிறுத்தப்பட்டதன் காரணமாக தொழில்களை இழந்தவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) இவர்களின் தொழில் இழப்பு சம்பந்தமான பிரச்சினைக்கு வழங்கப்படும் தீர்வு யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6108/ '15

கௌரவ ஈ.சரவணபவன்,— மீள் குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009 ஆம் ஆண்டிலும் அதற்கு முந்திய காலகட்டத்திலும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு ஆதன இழப்பீடு மற்றும் ஏனைய நிவாரணங்களை வழங்குவதற்கான அங்கீகாரம் பெற்பட்ட போதிலும் இன்னமுமே மேற்படி இழப்பீடோ அல்லது நிவாரணமோ கிடைக்காத அரச ஊழியர்கள் உள்ளனரா என்பதையும்;

(ii) வட மாகாணத்தில் அவ்வாறு நிவாரணம் பெற்றுக் கொடுக்க வேண்டிய அரச ஊழியர்களின் எண்ணிக்கை மாவட்ட வாரியாக தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(iii) இவர்களுக்கு வழங்க வேண்டிய மொத்த இழப்பீட்டுத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) உரிய காலப்பகுதியில் மேற்படி இழப்பீட்டுத் தொகையை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4980/'14

கௌரவ புத்திக பத்திரண,- கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) தென் மாகாண சபைக்கு உரித்தான பாடசாலைகளில் நிலவும் பட்டதாரி ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2012.08.28 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் ஊடாக விண்ணப்பங்கள் கோரப்பட்டன என்பதையும்;

(ii) 2012 நவம்பர் மாதத்தில் அதற்கான எழுத்துமூலப் பரீட்சை நடாத்தப்பட்டதென்பதையும்;

(iii) அந்த ஆண்டிலேயே டிசம்பர் மாதத்தில் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி ஆண்டளவில் தென் மாகாணத்தில் நிலவிய பட்டதாரி ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை;

(ii) அப்போதிருந்த தமிழ் மொழிமூல பட்டதாரி ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை;

(iii) ஒவ்வொரு பாடத்திற்குமேற்ப தமிழ் மொழிமூலத்தில் நிலவிய ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை;

(iv) அச்சந்தர்ப்பத்தில் நிலவிய சிங்கள மொழிமூல பட்டதாரி ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை;

(v) ஒவ்வொரு பாடத்திற்குமேற்ப சிங்கள மொழிமூலத்தில் நிலவிய ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை;

வெவ்வேறாக யாவையென்பதை அவர் சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடாத்தப்பட்ட எழுத்துமூல பரீட்சைக்கு தோற்றிய விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி விண்ணப்பதாரிகளின் பெயர்கள், முகவரிகள் மற்றும் பெற்றுக்கொண்ட புள்ளிகள் யாவையென்பதையும்;

(iii) ஆட்சேர்ப்புக்கான வெட்டுப்புள்ளி யாதென்பதையும்;

(iv) ஆசிரியர்களாக ஆர்சேர்க்கப்பட்ட விண்ணப்பதாரிகளின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவையென்பதையும்;

அவர் சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5248/ ' 14

கௌரவ அசோக் அபேசிங்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) குருநாகல் டி. பீ. வெலகெதர மத்திய மகா வித்தியாலயத்தில் மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடம் அமைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி ஆய்வுகூடத்திற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) மேற்படி ஆய்வுகூடம் திறந்துவைக்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iv) மேற்படி வித்தியாலயம் இரண்டாம்நிலை பாடசாலையாக மாற்றப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5947/ '15

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரினதும் பிரதி அமைச்சரினதும் பதவியணிக்கான நியமனங்கள் சனாதிபதி செயலாளரின் CA/1/171/1 ஆம் இலக்க 2010 மே 14 ஆந் தேதிய அரச செலவின முகாமைத்துவ சுற்றிக்கைக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(ii) மேலே குறிப்பிட்டுள்ள பதவியணிக்கு நியமிக்கப்பட்டுள்ளவர்களின் பெயர்கள், பதவிகள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள், தகைமைகள் ஆகிய விபரங்களை சமர்ப்பிப்பாரா;

(iii) மேற்சொல்லப்பட்ட பதவியணியில் உத்தியோகபூர்வ வாகனங்கள் உரித்தான உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்கள், வாகன வகைகள், இலக்கங்கள் மற்றும் உற்பத்திசெய்த ஆண்டுகள் யாவை;

(iv) மேற்படி அமைச்சருக்கும் பிரதி அமைச்சருக்கும் வழங்கப்பட்டுள்ள வாகனங்கள் யாவை;

(v) மேற்படி வாகனங்களுக்கு மேலதிகமாக அமைச்சின் ஒதுக்கத்திலிருந்து அல்லது விடயப்பரப்புடன் இணைந்த திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்டமுறையான நிறுவனங்களிலிருந்து மற்றும் பல்வேறு கருத்திட்டங்களிலிருந்து அமைச்சருக்கு அல்லது பிரதி அமைச்சருக்கு அல்லது மேற்படி பதவியணிக்கு பெறப்பட்டுள்ள வாகனங்கள் யாவை;

(vi) அந்த வாகனங்களின் இலக்கங்கள், வகைகள் மற்றும் உற்பத்திசெய்த ஆண்டுகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2015 யூலை 08, புதன்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

4981/ '14

கௌரவ புத்திக பதிரண,— நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) மினுவங்கொடை முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட வெஹிகல்ஸ் லங்கா தனியார் கம்பனி முதலீட்டுச் சபையில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கம்பனி பதிவு செய்யப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி கம்பனியின் உரிமையாளர்/உரிமையாளர்கள் யாவர் என்பதையும்;

(iv) கம்பனியைப் பதிவு செய்யும்போது மேற்படி தொழில்முயற்சியின் தன்மை காட்டப்பட்டுள்ள விதம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5948/ '15

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உணவுப் பாதுகாப்பு அமைச்சரின் பதவியணிக்கான நியமனங்கள் சனாதிபதி செயலாளரின் CA/1/171/1 ஆம் இலக்க 2010 மே 14 ஆந் தேதிய அரச செலவின முகாமைத்துவ சுற்றிக்கைக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(ii) மேலே குறிப்பிட்டுள்ள பதவியணிக்கு நியமிக்கப்பட்டுள்ளவர்களின் பெயர்கள், பதவிகள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள், தகைமைகள் ஆகிய விபரங்களைச் சமர்ப்பிப்பாரா;

(iii) மேற்சொல்லப்பட்ட பதவியணியில் உத்தியோகபூர்வ வாகனங்கள் உரித்தான உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்கள், வாகன வகைகள், இலக்கங்கள் மற்றும் உற்பத்திசெய்த ஆண்டுகள் யாவை;

(iv) மேற்படி அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்கள் யாவை;

(v) மேற்படி வாகனங்களுக்கு மேலதிகமாக அமைச்சின் ஒதுக்கத்திலிருந்து அல்லது விடயப்பரப்புடன் இணைந்த திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்டமுறையான நிறுவனங்களிலிருந்து மற்றும் பல்வேறு கருத்திட்டங்களிலிருந்து அமைச்சருக்கு அல்லது மேற்படி பதவியணிக்கு பெறப்பட்டுள்ள வாகனங்கள் யாவை;

(vi) அந்த வாகனங்களின் இலக்கங்கள், வகைகள் மற்றும் உற்பத்திசெய்த ஆண்டுகள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6047/ '15

கௌரவ ரஜீவ விஜேசிங்க,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2006 ஆம் ஆண்டுக் காலப்பகுதிக்கு முன்னர் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் பலவற்றினை ஆராய்வதற்கு காலஞ்சென்ற நீதியரசர் திரு. உதலாகம அவர்களின் கீழ் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டதை அவர் அறிவாரா?

(ஆ) (i) குறிப்பிட்ட ஆணைக்குழுவின் அறிக்கை எப்போது சமர்ப்பிக்கப்பட்டது என்பதையும்;

(ii) குறிப்பிட்ட அறிக்கை ஏன் பகிரங்கப்படுத்தப்படவில்லை என்பதையும்;

(iii) அறிக்கையின் உள்ளடக்கத்தினை வெளியிட நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iv) தேவையெனின், மேற்குறிப்பிட்ட ஆணைக்குழு கண்டறிந்தவற்றின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

6063/ '15

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சுன்னாகத்தில் இயங்குகின்ற "Northern Power Station" நிறுவனத்திற்கும் இலங்கை மின்சார சபைக்குமிடையே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கை பற்றி அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி உடன்படிக்கைக்கமைய மேற்படி நிறுவனத்தினால் இலங்கை மின்சார சபைக்கு மாதாந்தம் வழங்கப்பட வேண்டிய மின் வலு அலகுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தற்போது "Northern Power Station" நிறுவனம் இயங்குவதில்லை என்பதை அறிவாரா;

(ii) மேற்படி நிறுவனம் செயலிழந்துள்ள காரணத்தினால் ஏற்பட்டுள்ள நடைமுறைப் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் இனங்காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அவை தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள முன் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6109/ '15

கௌரவ ஈ. சரவணபவன்,— மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2009 ஆம் ஆண்டில் நலன்புரி நிலையங்களிலிருந்து மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு பல்வேறு நிறுவனங்கள் ஊடாக வழங்கப்பட்ட கொடுப்பனவுகளின் கீழ் முதலாவது கட்டமாக ரூபா 25000/= கொடுப்பனவையும் இரண்டாவது கட்டமாக மேலும் ரூபா 25000/= கொடுப்பனவையும் வழங்குவதற்கு முன்மொழியப்பட்டிருந்ததை அவர் அறிவாரா?

(ஆ) (i) மீள்குடியேறிய குடும்பங்களில் மேற்குறிப்பிட்ட முழுக் கொடுப்பனவும் வழங்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மீள்குடியேறிய குடும்பங்களில் மேற்படி எந்தவொரு கொடுப்பனவையும் பெறாத குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி கொடுப்பனவை வழங்குவதற்கு விபரங்கள் பெறப்பட்ட போதிலும், இரண்டாவது கட்டத்துக்கு ஏற்புடைய கொடுப்பனவுகளை பெறாத குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6113/ '15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— மக்கள் ஒழுங்கு மற்றும் கிறித்தவ அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டில் பொலிஸ் பரிசோதகர்களை பிரதம பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு பதவி உயர்த்துவதற்கான பரீட்சை நடாத்தப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாது என்பதையும்;

(iii) மேற்படி பரீட்சையில், குறித்த பதவி உயர்வுக்காக அலுவலர்களை தெரிவு செய்வதற்குப் பயன்படுத்திக் கொள்ளப்பட்ட அளவுகோல்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி பரீட்சையில் அலுவலர்கள் பெற்றுக் கொண்ட புள்ளிகள் மற்றும் பொலிஸ் மாஅதிபரினால் வழங்கப்பட்ட புள்ளிகள் ஒவ்வொரு அலுவலருக்கு அமையவும் தனித்தனியே யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5460/ '14

கௌரவ புத்திக பத்திரண,— சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வருகைதந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் இலங்கைக்கு அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகைதந்துள்ள பத்து நாடுகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) சுற்றுலாத் துறையைக் கட்டியெழுப்புவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சுற்றுலாத்துறையை விஸ்தரிக்கும்போது சுற்றாடலுக்கும் கலாசாரத்திற்கும் ஏற்படக்கூடிய சேதங்களைக் குறைப்பதற்கு ஏற்புடையதான திட்டமிடப்பட்ட வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தகைய வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(iii) அத்தகையதொரு வேலைத்திட்டம் இல்லையெனில், சுற்றுலாத் துறையை விஸ்தரிப்பதற்கு சமாந்திரமாக சுற்றாடலையும் கலாசாரத்தையும் பாதுகாப்பதற்கான திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்துவாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5949/ '15

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரினதும் பிரதி அமைச்சரினதும் பதவியணிக்கான நியமனங்கள் சனாதிபதி செயலாளரின் CA/1/171/1 ஆம் இலக்க 2010 மே 14 ஆந் தேதிய அரச செலவின முகாமைத்துவ சுற்றிக்கைக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(ii) மேலே குறிப்பிட்டுள்ள பதவியணிக்கு நியமிக்கப்பட்டுள்ளவர்களின் பெயர்கள், பதவிகள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள், தகைமைகள் ஆகிய விபரங்களைச் சமர்ப்பிப்பாரா;

(iii) மேற்சொல்லப்பட்ட பதவியணியில் உத்தியோகபூர்வ வாகனங்கள் உரித்தான உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்கள், வாகன வகைகள், இலக்கங்கள் மற்றும் உற்பத்திசெய்த ஆண்டுகள் யாவை;

(iv) மேற்படி அமைச்சருக்கும் பிரதி அமைச்சருக்கும் வழங்கப்பட்டுள்ள வாகனங்கள் யாவை;

(v) மேற்படி வாகனங்களுக்கு மேலதிகமாக அமைச்சின் ஒதுக்கத்திலிருந்து அல்லது விடயப்பரப்புடன் இணைந்த திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்டமுறையான நிறுவனங்களிலிருந்து மற்றும் பல்வேறு கருத்திட்டங்களிலிருந்து அமைச்சருக்கு அல்லது பிரதி அமைச்சருக்கு அல்லது மேற்படி பதவியணிக்கு பெறப்பட்டுள்ள வாகனங்கள் யாவை;

(vi) அந்த வாகனங்களின் இலக்கங்கள், வகைகள் மற்றும் உற்பத்திசெய்த ஆண்டுகள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6105/ '15

கௌரவ ரஜீவ விஜேசிங்க,— உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அண்மையில் நியமிக்கப்பட்ட சகல உறுப்பினர்களும் கொழும்பை வதிவிடமாகக் கொண்டவர்களா என்பதையும்;

(ii) அவர்களுள் மருத்துவ தொழிற்துறையைச் சார்ந்தவர்களின் எண்ணிக்கையையும்;

(iii) அவர்கள் பணியாற்றுகின்ற பல்கலைக்கழகங்களின் பெயர்களையும்;

(iv) குறிப்பிட்ட ஆணைக்குழுவிற்கு சனாதிபதியின் ஆலோசகர் டாக்டர் விக்ரம வீரசூரிய என்பவரை நியமித்தமைக்கான காரணத்தையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) டாக்டர் வீரசூரிய என்பவரின் நியமனம் தொடர்பில் முன்னாள் சனாதிபதி திருமதி சந்திரிக்கா குமாரணத்துங்கவுடன் கலந்தாலோசனை செய்யப்பட்டதா என்பதையும்;

(ii) அப்போதைய மூன்றாம்நிலைக் கல்வி மற்றும் பயிற்சி அமைச்சின் ஆலோசகராக டாக்டர் வீரசூரிய என்பவரின் மகன் பணியாற்றிய நிறுவனமொன்றிற்கு, பல்கலைக்கழகங்களின் பொருத்தம் மற்றும் தரம் ஆகியவற்றை மேம்படுத்தும் முகமாக, உலக வங்கியின் கருத்திட்டத்தின் கீழ் ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டதா என்பதையும்;

(iii) அக்கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஊழியச் சந்தை ஆய்வு தொடர்பில் அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டதா என்பதையும்;

(iv) குறிப்பிட்ட ஆய்வு தொடர்பான அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

(v) பல்கலைக்கழக கல்வியின் பொருத்தத்தை மேம்படுத்துவதற்கு அதன் கண்டுபிடிப்புகள் பயன்படுத்தப்பட்டனவா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

6110/ '15

கௌரவ ஈ. சரவணபவன்,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யுத்தம் காரணமாக வன்னிப் பிரதேசத்தில் கைவிடப்பட்டிருந்த ஒட்டுமொத்த வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) 2013 மார்ச் மாதமளவில் மேற்படி வாகனங்களில் 1724 வாகனங்கள் உரிமையாளர்களுக்கு மீள கையளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(iii) இன்றளவில் உரிமையாளர்களுக்கு மீள கையளிக்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை உறுதியாக எவ்வளவென்பதையும்;

(iv) இதுவரை மீள கையளிக்கப்படாத வாகனங்களின் தற்போதைய நிலைமை என்னவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6114/ '15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய பாடசாலைகளுக்கு அருகே உறுதி கிடைக்காத தொடர்மாடி வீடுகள் மற்றும் கூட்டாட்சி வீடுகளில் நிரந்தரமாக வசிக்கின்ற பிள்ளைகளை குறித்த பாடசாலைகளுக்கு அனுமதிக்காமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) பிள்ளைகளை பாடசாலைக்கு அனுமதிக்கும் போது பெற்றோரின் நிரந்தர வசிப்பிடத்தை உறுதி செய்வதற்கு, வாக்காளர் இடாப்பு, நீர் கட்டணப்பட்டியல் மற்றும் மின்சார கட்டணப் பட்டியலை சமர்ப்பித்தல் போதுமானதாக இல்லையா என்பதையும்;

(iii) மேலே (i) இற்கு அமைய அநீதிக்கு ஆளாகி பாடசாலையொன்று கிடைக்காத பிள்ளைகள் தொடர்பாக இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) உறுதி கிடைக்காத கூட்டாட்சி வீடுகள் மற்றும் தொடர்மாடி வீடுகளில் வசிக்கின்ற பிள்ளைகளை 2015 ஆம் ஆண்டில் அண்மித்த தேசிய பாடசாலைக்கு அனுமதிப்பதற்காக தற்போது முன்மொழியப்பட்டுள்ள முறையியல்கள் யாவை என்பதையும்;

(v) 2015 ஆம் ஆண்டில் இதுவரை பாடசாலை எதுவும் கிடைக்காதுள்ள பிள்ளைகள் தொடர்பாக பின்பற்றப்படுகின்ற முறையியல் யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5461/ '14

கௌரவ புத்திக பத்திரன,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014.05.25 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்திற்கு சற்று தொலைவிலுள்ள கடலில் அமைந்துள்ள மசகு எண்ணெய் அனுப்பும் குழாய் பழுதடைந்ததனால் மசகு எண்ணெய் ஏற்றிச் செல்லும் கப்பல்களுக்கு தாமதக் கட்டணம் செலுத்த நேரிட்ட கப்பல்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அந்த ஒவ்வொரு கப்பலுக்கும் செலுத்திய பணம் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) குழாயை திருத்துவதற்கு எத்தனை நாட்கள் எடுத்தன என்பதையும்;

(iv) இக் காரணத்தினால் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை முழுமையாக மூடிவிடுவதற்கு நேரிட்ட நாட்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(v) எரிபொருள் அனுப்பும் குழாய்க்கு ஏற்பட்ட இந்த சேதத்தினால் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு ஏற்பட்ட மொத்த நட்டம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மிதவைக்குத் தேவையான குழாய்களை கொள்வனவு செய்வதற்காக இறுதியாக கேள்விப் பத்திரம் கோரப்பட்ட திகதி எது என்பதையும்;

(ii) அவ்வாறெனின், கேள்விப் பத்திரங்களை சமர்ப்பித்த கம்பனிகள் மற்றும் அந்த கம்பனிகள் உரித்தாகும் நாடுகள் யாவை என்பதையும்;

(iii) கேள்விப் பத்திரம் வழங்கப்பட்ட கம்பனி யாதென்பதையும்;

(iv) அந்தக் கம்பனிக்கு கேள்விப் பத்திரம் வழங்கப்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5950/ '15

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— பொது நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி பற்றிய அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொது நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி பற்றிய அமைச்சரினதும் இராஜாங்க அமைச்சரினதும் பதவியணிக்கான நியமனங்கள் சனாதிபதி செயலாளரின் CA/1/171/1 ஆம் இலக்க 2010 மே 14 ஆந் தேதிய அரச செலவின முகாமைத்துவ சுற்றிக்கைக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(ii) மேலே குறிப்பிட்டுள்ள பதவியணிக்கு நியமிக்கப்பட்டுள்ளவர்களின் பெயர்கள், பதவிகள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள், தகைமைகள் ஆகிய விபரங்களைச் சமர்ப்பிப்பாரா;

(iii) மேற்சொல்லப்பட்ட பதவியணியில் உத்தியோகபூர்வ வாகனங்கள் உரித்தான உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்கள், வாகன வகைகள், இலக்கங்கள் மற்றும் உற்பத்திசெய்த ஆண்டுகள் யாவை;

(iv) மேற்படி அமைச்சருக்கும் இராஜாங்க அமைச்சருக்கும் வழங்கப்பட்டுள்ள வாகனங்கள் யாவை;

(v) மேற்படி வாகனங்களுக்கு மேலதிகமாக அமைச்சின் ஒதுக்கத்திலிருந்து அல்லது விடயப்பரப்புடன் இணைந்த திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்டமுறையான நிறுவனங்களிலிருந்து மற்றும் பல்வேறு கருத்திட்டங்களிலிருந்து அமைச்சருக்கு அல்லது இராஜாங்க அமைச்சருக்கு அல்லது மேற்படி பதவியணிக்கு பெறப்பட்டுள்ள வாகனங்கள் யாவை;

(vi) அந்த வாகனங்களின் இலக்கங்கள், வகைகள் மற்றும் உற்பத்திசெய்த ஆண்டுகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2015 யூலை 09, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

5464/ '14

கௌரவ புத்திக பத்திரண,— நெடுஞ்சாலைகள், முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெற்கு, கட்டுநாயக்க – கொழும்பு மற்றும் வெளிச் சுற்றுவட்ட அதிவேக நெடுஞ்சாலைகள் காரணமாக வயற் காணிகள், ஈர நிலங்கள் மற்றும் வெள்ளப் பெருக்குச் சமவெளிகள் ஆகியவற்றுக்கு சேதமேற்பட்டுள்ளன என்பதையும்;

(ii) இதன் காரணமாக அதிவேக நெடுஞ்சாலைகளை சுற்றிலுமுள்ள மக்கள் வெள்ளப்பெருக்கு அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்துள்ளார்கள் என்பதையும்;

(iii) மேற்படி சுற்றாடல் சேதமானது முழு நாட்டினதும் சுற்றாடல் சமநிலையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) அதிவேக நெடுஞ்சாலைகள் காரணமாக வெள்ளப்பெருக்கு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள பிரதேசங்களை அத்தகைய அச்சுறுத்தலிலிருந்து மீட்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தகைய நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) சேதத்துக்குள்ளான சுற்றாடல் முறைமைகளை பேணுவதற்கு அவர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்தகைய நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேலே அ(ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு அச்சுறுத்தலுடன் தொடர்புடைய ஏனைய அமைச்சுக்களுடனான ஒருங்கிணைந்ததொரு நிகழ்ச்சித்திட்டம் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தகைய நிகழ்ச்சித்திட்டம் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5951/ '15

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சரினதும் இராஜங்க அமைச்சரினதும் பிரதி அமைச்சரினதும் பதவியணிக்கான நியமனங்கள் சனாதிபதி செயலாளரின் CA/1/171/1 ஆம் இலக்க 2010 மே 14 ஆந் தேதிய அரச செலவின முகாமைத்துவ சுற்றிக்கைக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(ii) மேலே குறிப்பிட்டுள்ள பதவியணிக்கு நியமிக்கப்பட்டுள்ளவர்களின் பெயர்கள், பதவிகள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள், தகைமைகள் ஆகிய விபரங்களை சமர்ப்பிப்பாரா;

(iii) மேற்சொல்லப்பட்ட பதவியணியில் உத்தியோகபூர்வ வாகனங்கள் உரித்தான உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்கள், வாகன வகைகள், இலக்கங்கள் மற்றும் உற்பத்திசெய்த ஆண்டுகள் யாவை;

(iv) மேற்படி அமைச்சருக்கும் இராஜாங்க அமைச்சருக்கும் பிரதி அமைச்சருக்கும் வழங்கப்பட்டுள்ள வாகனங்கள் யாவை;

(v) மேற்படி வாகனங்களுக்கு மேலதிகமாக அமைச்சின் ஒதுக்கத்திலிருந்து அல்லது விடயப்பரப்புடன் இணைந்த திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்டமுறையான நிறுவனங்களிலிருந்து மற்றும் பல்வேறு கருத்திட்டங்களிலிருந்து அமைச்சருக்கு அல்லது இராஜாங்க அமைச்சருக்கு அல்லது பிரதி அமைச்சருக்கு அல்லது மேற்படி பதவியணிக்கு பெறப்பட்டுள்ள வாகனங்கள் யாவை;

(vi) அந்த வாகனங்களின் இலக்கங்கள், வகைகள் மற்றும் உற்பத்திசெய்த ஆண்டுகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6111/ '15

கௌரவ ஈ. சரவணபவன்,— மக்கள் ஒழுங்கு மற்றும் கிறித்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வன்னி யுத்தத்தின்போது இடம்பெயர்ந்தவர்களுக்காக தாபிக்கப்பட்ட அனைத்து நலன்புரி நிலையங்களிலும் பொலிஸ் திணைக்களத்தினால் யுத்தத்தில் ஏற்பட்ட உயிரிழப்பு, சொத்து சேதம் பற்றிய முறைப்பாடுகளை பதிவு செய்துகொள்ளலும், அது தொடர்பாக மதிப்பீடு செய்தலும் மேற்கொள்ளப்பட்டதை அவர் அறிவாரா?

(ஆ) யுத்த இழப்பீட்டை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளை வசதிப்படுத்துவதற்காக மேலே குறிப்பிட்டவாறு பதியப்பட்ட முறைப்பாடுகளின் பிரதியை பொதுமக்களுக்கு பெற்றுக்கொடுக்க முடியுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5548/ '14

கௌரவ புத்திக பத்திரண,— சமூக சேவைகள், நலன்புரி மற்றும் கால்நடை வளர்ப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாடுகளுக்கு ஏற்படும் கோமாரி நோய் மிகத் தீவிரமாக இலங்கை பூராவிலும் பரவிச் செல்கின்றதென்பதையும்;

(ii) கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தில் மேற்படி நோயை தடுப்பதற்கு வழங்கப்படும் தடுப்பூசி போதியளவில் இல்லையென்பதையும்;

(iii) மேற்படி நோயை கட்டுபடுத்துதல் தொடர்பாக குறிப்பிட்ட திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் பல விடயங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதென்பதையும்;

(iv) அவ்வாறு செய்ததன் காரணமாக மேற்படி நோயைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையிலிருந்து அகற்றப்பட்ட விடயங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி விடயங்கள் அகற்றப்பட்டமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) மீண்டும் மேற்படி விடயங்களை உள்ளடக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) மாடுகளுக்கு ஏற்படும் கோமாரி நோயை கட்டுப்படுத்தத் தேவையான ஔடதங்களை பற்றாக்குறையின்றி பெற்றுக்கொடுக்க எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

(v) மேற்படி நோயினால் அழிவடையும் கால்நடை வளத்தை பரவச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் துரித நடவடிக்கை யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5952/ '15

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நிதி அமைச்சரினதும், இராஜாங்க அமைச்சரினதும் பதவியணிக்கான நியமனங்கள் சனாதிபதி செயலாளரின் CA/1/171/1 ஆம் இலக்க 2010 மே 14 ஆந் தேதிய அரச செலவின முகாமைத்துவ சுற்றிக்கைக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(ii) மேலே குறிப்பிட்டுள்ள பதவியணிக்கு நியமிக்கப்பட்டுள்ளவர்களின் பெயர்கள், பதவிகள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள், தகைமைகள் ஆகிய விபரங்களை சமர்ப்பிப்பாரா;

(iii) மேற்சொல்லப்பட்ட பதவியணியில் உத்தியோகபூர்வ வாகனங்கள் உரித்தான உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்கள், வாகன வகைகள், இலக்கங்கள் மற்றும் உற்பத்திசெய்த ஆண்டுகள் யாவை;

(iv) மேற்படி அமைச்சருக்கும் இராஜாங்க அமைச்சருக்கும் வழங்கப்பட்டுள்ள வாகனங்கள் யாவை;

(v) மேற்படி வாகனங்களுக்கு மேலதிகமாக அமைச்சின் ஒதுக்கத்திலிருந்து அல்லது விடயப்பரப்புடன் இணைந்த திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்டமுறையான நிறுவனங்களிலிருந்து மற்றும் பல்வேறு கருத்திட்டங்களிலிருந்து அமைச்சருக்கு அல்லது இராஜாங்க அமைச்சருக்கு அல்லது மேற்படி பதவியணிக்கு பெறப்பட்டுள்ள வாகனங்கள் யாவை;

(vi) அந்த வாகனங்களின் இலக்கங்கள், வகைகள் மற்றும் உற்பத்திசெய்த ஆண்டுகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6112/ '15

கௌரவ ஈ. சரவணபவன்,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வன்னி யுத்தத்தின்போது ஷெல் மற்றும் துப்பாக்கி ரவைத் தாக்குதல்களுக்கு உள்ளாகியமையால் உடலில் ஊடுறுவியுள்ள ஷெல் மற்றும் துப்பாக்கி ரவைத் துண்டுகளோடு உயிர் வாழ்ந்துகொண்டிருக்கும் பொது மக்களின் எண்ணிக்கை மாவட்ட அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) இவர்களுக்கு மத்தியில் உள்ள பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) விஷேட தேவையுள்ளவர்களாகக் கருதி மேற்படி மாணவர்களுக்கு விஷேட கவனிப்புகளை பெற்றுக்கொடுப்பாரா என்பதையும்;

(iv) இவர்களின் நலனோம்புகைக்காக நீண்டகால ரீதியில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5549/ '14

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நறுமணங்கள், உபகரணங்கள் மற்றும் அவுடதங்கள் ஒழுங்குமுறையாக்கல் அதிகாரசபையினுள் கட்டுபடுத்த முடியாத அளவிற்கு ஊழல் புரையோடிப்போயுள்ளதால் அங்கு அனைத்து மேல் மற்றும் கீழ் நிலை பதவிகளை வகிக்கும் ஊழியர்களையும் இடமாற்றம் செய்ய வேண்டுமென இவ்வதிகாரசபையின் பணிப்பாளர் திரு. அமல் ஹர்ஷ சில்வா அமைச்சுக்கு அறிவித்துள்ளாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே பெயர் குறிப்பிடப்பட்ட பணிப்பாளரின் கோரிக்கை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இடமாற்றம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் பெற்றுக்கொடுக்கப்பட்ட நிறுவனங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பார?

(இ) (i) நறுமணங்கள், உபகரணங்கள் மற்றும் அவுடதங்கள் ஒழுங்குமுறையாக்கல் அதிகாரசபையில் ஏற்பட்டுள்ள ஊழல் சம்பவங்கள் பற்றி விசாரணை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனின், அத்திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி விசாரணையின் பெறுபேறுகளை சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5953/ '15

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சரினதும் பிரதி அமைச்சரினதும் பதவியணிக்கான நியமனங்கள் சனாதிபதி செயலாளரின் CA/1/171/1 ஆம் இலக்க 2010 மே 14 ஆந் தேதிய அரச செலவின முகாமைத்துவ சுற்றிக்கைக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(ii) மேலே குறிப்பிட்டுள்ள பதவியணிக்கு நியமிக்கப்பட்டுள்ளவர்களின் பெயர்கள், பதவிகள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள், தகைமைகள் ஆகிய விபரங்களை சமர்ப்பிப்பாரா;

(iii) மேற்சொல்லப்பட்ட பதவியணியில் உத்தியோகபூர்வ வாகனங்கள் உரித்தான உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்கள், வாகன வகைகள், இலக்கங்கள் மற்றும் உற்பத்திசெய்த ஆண்டுகள் யாவை;

(iv) மேற்படி அமைச்சருக்கும் பிரதி அமைச்சருக்கும் வழங்கப்பட்டுள்ள வாகனங்கள் யாவை;

(v) மேற்படி வாகனங்களுக்கு மேலதிகமாக அமைச்சின் ஒதுக்கத்திலிருந்து அல்லது விடயப்பரப்புடன் இணைந்த திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்டமுறையான நிறுவனங்களிலிருந்து மற்றும் பல்வேறு கருத்திட்டங்களிலிருந்து அமைச்சருக்கு அல்லது பிரதி அமைச்சருக்கு அல்லது மேற்படி பதவியணிக்கு பெறப்பட்டுள்ள வாகனங்கள் யாவை;

(vi) அந்த வாகனங்களின் இலக்கங்கள், வகைகள் மற்றும் உற்பத்திசெய்த ஆண்டுகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2015 யூலை 10, வெள்ளிக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

4822/ '14

கௌரவ புத்திக பதிரண,— வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(3)

(அ) (i) கொழும்பு மாவட்டத்தின், மாளிகாவத்தை வீடமைப்புத் திட்டத்தில் அமைந்துள்ள கடை அறைகள் மற்றும் வாகன தரிப்பிடம் கொள்வனவாளர்களுக்கு வழங்கப்படுகையில் கேள்விப்பத்திரம் கோரல் நடைபெற்றுள்ளதா என்பதையும்;

(ii) கேள்விப்பத்திரம் கோரப்படவில்லையெனில், அவை வழங்கப்பட்ட முறையியல் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேலே குறிப்பிட்டுள்ளதன்படி கேள்விப்பத்திரம் கோரப்பட்டிருப்பின், கேள்விப் பத்திரங்களை சமர்ப்பித்த விண்ணப்பதாரர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் ஒவ்வொரு விண்ணப்படிவத்திலும் குறிப்பிடப்பட்டிருந்த பணத்தொகை தனித்தனியாக உள்ளடக்கப்பட்ட பட்டியலொன்றை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மாளிகாவத்தை வீடமைப்புத் திட்டத்தில் அமைந்துள்ள கடை அறைகள் மற்றும் வாகன தரிப்பிடங்களின் தற்போதைய உரிமையாளர்களின் பெயர்கள், முகவரிகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொருவரும் கடை அறைகள் மற்றும் வாகன தரிப்பிடங்களை எவ்வளவு பணத் தொகைக்கு பெற்றுக்கொண்டுள்ளனர் என்பதையும் தனித்தனியாகவும்

அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5954/ '15

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சரினதும் இராஜாங்க அமைச்சரினதும் பதவியணிக்கான நியமனங்கள் சனாதிபதி செயலாளரின் CA/1/171/1 ஆம் இலக்க 2010 மே 14 ஆந் தேதிய அரச செலவின முகாமைத்துவ சுற்றிக்கைக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(ii) மேலே குறிப்பிட்டுள்ள பதவியணிக்கு நியமிக்கப்பட்டுள்ளவர்களின் பெயர்கள், பதவிகள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள், தகைமைகள் ஆகிய விபரங்களை சமர்ப்பிப்பாரா;

(iii) மேற்சொல்லப்பட்ட பதவியணியில் உத்தியோகபூர்வ வாகனங்கள் உரித்தான உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்கள், வாகன வகைகள், இலக்கங்கள் மற்றும் உற்பத்திசெய்த ஆண்டுகள் யாவை;

(iv) மேற்படி அமைச்சருக்கும் இராஜாங்க அமைச்சருக்கும் வழங்கப்பட்டுள்ள வாகனங்கள் யாவை;

(v) மேற்படி வாகனங்களுக்கு மேலதிகமாக அமைச்சின் ஒதுக்கத்திலிருந்து அல்லது விடயப்பரப்புடன் இணைந்த திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்டமுறையான நிறுவனங்களிலிருந்து மற்றும் பல்வேறு கருத்திட்டங்களிலிருந்து அமைச்சருக்கு அல்லது இராஜாங்கஅமைச்சருக்கு அல்லது மேற்படி பதவியணிக்கு பெறப்பட்டுள்ள வாகனங்கள் யாவை;

(vi) அந்த வாகனங்களின் இலக்கங்கள், வகைகள் மற்றும் உற்பத்திசெய்த ஆண்டுகள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5775/ '14

கௌரவ புத்திக பத்திரன,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 ஆம் ஆண்டில் சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் புனரமைப்பு நடவடிக்கைகளுகு;கு செலவிடப்பட்ட பணத் தொகை யாதென்பதையும்;

(ii) மேற்படி புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட நிறுவனம் யாதென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனத்துக்கு ஏற்புடைய புனரமைப்பு நடவடிக்கைகளை வழங்கும் போது கேள்பத்திரம் கோரல் நடைபெற்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், அந்நிறுவனம் சமர்ப்பித்திருந்த கேள்விப்பத்திரத்தின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(v) கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்திருந்த ஏனைய நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(vi) மேற்படி நிறுவனங்களின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி, இலக்கங்கள் உரித்தான நாடுகள் மற்றும் கேள்விப் பத்திரங்களின் பெறுமதி வெவ்வேறாக யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனத்திற்கு கேள்விப்பத்திரம் வழங்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி நிறுவனத்துடன் சேர்ந்து செயலாற்றியதன் மூலம் அரசாங்கத்துக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5955/ '15

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரினதும் இராஜாங்க அமைச்சரினதும் பதவியணிக்கான நியமனங்கள் சனாதிபதி செயலாளரின் CA/1/171/1 ஆம் இலக்க 2010 மே 14 ஆந் தேதிய அரச செலவின முகாமைத்துவ சுற்றிக்கைக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(ii) மேலே குறிப்பிட்டுள்ள பதவியணிக்கு நியமிக்கப்பட்டுள்ளவர்களின் பெயர்கள், பதவிகள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள், தகைமைகள் ஆகிய விபரங்களை சமர்ப்பிப்பாரா;

(iii) மேற்சொல்லப்பட்ட பதவியணியில் உத்தியோகபூர்வ வாகனங்கள் உரித்தான உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்கள், வாகன வகைகள், இலக்கங்கள் மற்றும் உற்பத்திசெய்த ஆண்டுகள் யாவை;

(iv) மேற்படி அமைச்சருக்கும் இராஜாங்க அமைச்சருக்கும் வழங்கப்பட்டுள்ள வாகனங்கள் யாவை;

(v) மேற்படி வாகனங்களுக்கு மேலதிகமாக அமைச்சின் ஒதுக்கத்திலிருந்து அல்லது விடயப்பரப்புடன் இணைந்த திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்டமுறையான நிறுவனங்களிலிருந்து மற்றும் பல்வேறு கருத்திட்டங்களிலிருந்து அமைச்சருக்கு, இராஜாங்க அமைச்சருக்கு அல்லது மேற்படி பதவியணிக்கு பெறப்பட்டுள்ள வாகனங்கள் யாவை;

(vi) அந்த வாகனங்களின் இலக்கங்கள், வகைகள் மற்றும் உற்பத்திசெய்த ஆண்டுகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5776/ '14

கௌரவ புத்திக பத்திரன,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனதுக்குச் சொந்தமான காணியின் அளவு எத்தனை ஏக்கர்கள் என்பதையும்;

(ii) மேற்படி காணிகள் அமைந்துள்ள இடங்ககள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான காணிகளை விற்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணம் யாதென்பதையும்;

(iii) மேற்படி காணிகளை விற்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள விதம் யாதென்பதையும்;

(iv) மேற்படி காணிகள் விற்பனை செய்யப்படுவதை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5956/ '15

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கமத்தொழில் அமைச்சரினதும் பிரதி அமைச்சரினதும் பதவியணிக்கான நியமனங்கள் சனாதிபதி செயலாளரின் CA/1/171/1 ஆம் இலக்க 2010 மே 14 ஆந் தேதிய அரச செலவின முகாமைத்துவ சுற்றிக்கைக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(ii) மேலே குறிப்பிட்டுள்ள பதவியணிக்கு நியமிக்கப்பட்டுள்ளவர்களின் பெயர்கள், பதவிகள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள், தகைமைகள் ஆகிய விபரங்களை சமர்ப்பிப்பாரா;

(iii) மேற்சொல்லப்பட்ட பதவியணியில் உத்தியோகபூர்வ வாகனங்கள் உரித்தான உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்கள், வாகன வகைகள், இலக்கங்கள் மற்றும் உற்பத்திசெய்த ஆண்டுகள் யாவை;

(iv) மேற்படி அமைச்சருக்கும் பிரதி அமைச்சருக்கும் வழங்கப்பட்டுள்ள வாகனங்கள் யாவை;

(v) மேற்படி வாகனங்களுக்கு மேலதிகமாக அமைச்சின் ஒதுக்கத்திலிருந்து அல்லது விடயப்பரப்புடன் இணைந்த திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்டமுறையான நிறுவனங்களிலிருந்து மற்றும் பல்வேறு கருத்திட்டங்களிலிருந்து அமைச்சருக்கு, பிரதி அமைச்சருக்கு அல்லது மேற்படி பதவியணிக்கு பெறப்பட்டுள்ள வாகனங்கள் யாவை;

(vi) அந்த வாகனங்களின் இலக்கங்கள், வகைகள் மற்றும் உற்பத்திசெய்த ஆண்டுகள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?